# SOUTH EASTERN UNIVERITY OF SRI LANKA

## SECOND YEAR EXAMINATIONS IN ARTS (EXTERNAL) – 2006 / 2007

## HELD IN MAY - 2007

## TML 2.21 – GRAMMAR OF TAMIL LANGUAGE

ஒவ்வொரு பகுதியிலிருந்தும் குறைந்தபட்சம் இரண்டு வினாக்களையேனும் தெரிவுசெய்து, எல்லாமாக ஐந்து (5) வினாக்களுக்கு மாத்திரம் விடை தருக.

நேரம் : 03 மணித்தியாலங்கள்

---

### பகுதி – I

01. முதல் எழுத்து, சார்பெழுத்து என்ற வகைப்பாட்டை விளக்கி, சார்பெழுத்து பற்றிய கொள்கையில் தமிழ் இலக்கணக்காரர்களின் கருத்துக்கள் குறித்து ஆராய்க.

02. இடைநிலை மெய்மயக்கம் பற்றி நன்னூல் கூறுவனவற்றை விளக்கி, இக்காலத் தமிழில் இடைநிலை மெய்மயக்கத்தில் ஏற்பட்டுள்ள மாற்றங்களை ஆராய்க.

03. நன்னூல் கூறும் வினை விகுதிகளை வகைப்படுத்தி, வினைச் சொல்லாக்கத்தில் அவற்றின் பயன்பாடு பற்றி விபரிக்குக.

04. மேல்வரும் நன்னூல் சூத்திரத்தை உதாரணங்களுடன் விளக்கி, அவை தற்காலத்திற்குப் பொருந்துமோ என ஆராய்க.

“லளவேற் றுமையிற் றடவு மல்வழி
அவற்றோ டுறழ்வும் வலிவரி னாமெலி
மேவி னணவு மிடைவரி னியல்பும்
ஆகு மிருவழி யானு மென்ப”

### பகுதி – II

05. நன்னூலார் கூறும் வேற்றுமைப் பாகுபாட்டிலுள்ள குறைநிறைகளை எடுத்துக்காட்டி, தற்காலத் தமிழில் கருவி, உடனிகழ்ச்சி, உடைமை வேற்றுமைகள் அமையுமாற்றை விளக்குக.

06. தன்வினை, பிறவினை, காரணவினை என்பனவற்றை விளக்கி, தமிழ் வினைச் சொற்களை அவ்வாறு வகைப்படுத்துவதிலுள்ள பிரச்சினைகளை ஆராய்க.

07. உரிச்சொல் பற்றி இலக்கண நூலார் தரும் கூற்றுக்களை ஆராய்ந்து தற்கால மொழிப் பயன்பாட்டில் உரிச்சொல் வகிக்கும் இடம் பற்றி விமர்சிக்குக.

08. பின்வருவனவற்றுள் எவையேனும் நான்கு பற்றி சிறுகுறிப்பெழுதுக.

(அ) பகுபதம்

(ஆ) குற்றியலுகரப் புணர்ச்சி

(இ) மூவிடப்பெயர்

(ஈ) எழுவாய் வேற்றுமை

(உ) துணை வினைகள்

(ஊ) பெயரடை, வினையடை

(எ) இடைச் சொல்

***